1983 மார்ச் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் ரூலைப் படிப்பதற்கு முன் நான் சொல்கிறேன். இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலை என்னவென்றால், 240ஆம் எண்ணுள்ள கேள்வி எடுக்கப்பட்டது, இந்தக் கேள்வி முன்னர், அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பட்டது. அன்றைக்கு அந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அன்றைக்கு வைக்கப்பட்டது இன்றைக்கு நினைவு இருக்கும் என்பது முடியாத காரியம். உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்க முடியாதுதான். எனவே அந்த அறிக்கை இல்லாத நிலையில் இதை எடுத்துக் கொண்டால் எப்படி விவாதிக்க முடியும் என்ற பிரச்னையை உறுப்பினர்கள் எழுப்பினார்கள். ஆகவே, இந்தக் கேள்வியைப் பிறகு திரும்ப எடுத்து கொள்ளலாம். அப்படித் தீர்ப்பளிப்பதற்கு எனக்கு உரிமை உண்டு. ஆகவே, இதிலே பிரசினை இல்லை.

சங்கரன்கோவில் நகரில் ஆதிதிராவிடர் மாணவர்
மாணவியர்களுக்கான உணவு விடுதிகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 241—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகரில் ஆதிதிராவிடர் மாணவர், மாணவிகளின் அரசினர் உணவு விடுதிகளுக்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் நகரில் மாணவியர் உணவு விடுதிக்கு 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் இக்கட்டிட வேலையானது தொடங்கப்பட்டு விட்டது என்றும், இன்னும் 6 மாதங்களுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்கள். மேற்படி நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்ட முன்மொழிவுகள் எதுவும் நிலுவையில் இல்லை என்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1983 மார்ச் 7]

திரு. பி. துரைராஜ் : பேரவைத் தலைவரவர்களே, சங்கரன்கோவில் நகரில் உள்ள மாணவர் விடுதிக்குக் கட்டிடம் தேவை என்று தற்போது கோரிக்கை வைக்கப்பட்டு, கடந்த சில நாட்களுக்கு முன்னால் அதுகுறித்து அதிகாரிகள் அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதை வரவழைத்து, விரைவில் அந்தக் கட்டிடத்தை கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாணவர் விடுதிக்கு அவர்கள் அனுப்பி இருப்பதாக உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்கள். அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

டெல்லியில் கூடும் அணி சேரா நாடுகளின் மகாநாட்டிற்கு வாழ்த்து

* திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, பாரதத்தின் நெடிய வரலாற்றிலே இன்றைக்கு ஒரு சிறப்புக்குரிய நாள். உலகத்தில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகை கொண்ட அணி சேராத 100 நாடுகளின் 7-வது உச்சி மாநாடு இன்றயைதினம் டெல்லியிலே கூடுகிறது. பாரதத்தின் பெருமைக்குரிய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இந்தக் கூட்டுச் சேராத நாடுகளின் தலைவர் பொறுப்பை அடுத்த மூன்றாண்டுகளுக்கு இன்னும் சற்று நேரத்திலே ஏற்க இருக்கிறார்கள். உலக சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், பொருளாதார மேம்பாடுகளுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் இந்த மாநாடு வெற்றி பெறவும், பாரதத்தின் முயற்சி வெற்றி பெறவும் அவை முன்னவரவர்களும், தாங்களும் வாழ்த்துக் கூறுவது இந்த நேரத்திலே பொருத்தமாக இருக்கும் என்று நான கூறுகிறேன்.

(முற்பகல் 10—10)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றமே கூடவில்லை. ஒரு வார காலத்திற்கு ஒத்தி வைத்திருக்கிறார்கள். அதைப்போல் ஏதாவது நமக்கும் சலுகைகளை அளித்தால் சௌகரியமாக இருக்கும். அப்படிச் செய்தால் பாராளுமன்றத்தைப் பின்பற்றியதாகவும் இது அமையும் என்று ஆலோசனை சொல்கிறேன்,